Y-M-CA

## மத்திய அரசு வழங்கிய பணத்தை மாகாண சபை தரவிரும்பவில்லை

மத்திய அரசினால் கிளிநொச்சிப் பகுதியின் சுகாதார நடவடிக்கைகளுக்காக வடகிழக்கு மாகாணசபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட 5 லட்சம் ரூபா இதுவரை கிளிநொச்சிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. வடபகுதியில் தற்போது தோன்றியுள்ள நிலைமையை சாட்டாக வைத்து திருமலை மாகாண சபையில் உள்ள அதிகாரிகள் இந்நிதியை இங்கு அனுப்பி வைக்கவில்லை யெனத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

★ கிளிநொச்சி மாவட்டத்தில்

## செலவழிக்கப்படாத பணம் திருப்பி அனுப்பப்பட்டது

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில ஆசிரியர்களுக்கு 1989 ஆம் ஆண்டுக்குரிய அபாயக்கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை எனத்தெரிய வருகிறது. இம் மாவட்டத்தின் கல்வித்திணைக்கள கணக்குப் பிரிவில்

— 4 ஆம் பக்கம் பார்க்க


பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 143 பிரசோற்பத்தி சித்திரை 07 ( 20-04-1991 ) சனி


## சகலருக்குமான இலவச நிவாரணம் விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு

சகலருக்குமான 5ஆம் கட்ட இலவச நிவாரண விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற போது இம் முடிவு எடுக்கப்பட்டது. இதே வேளை அடுத்த கட்ட நிவாரண விநியோகமும் 'லங்காமுதி' கப்பல் வந்தபின்னரே தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (74)

★ பேச்சுவார்த்தை நடாத்த அரசு விருப்பம்; ஆனால் நிபந்தனை

# அதிகாரமுடைய தலைவரே கலந்துகொள்ளவேண்டும்

## கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி

ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக மீண்டும் தனது நிபந்தனைகளை அறிவித்துள்ளது. இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாம் கூட்டத்தொடரை ஆரம்பித்து நேற்று உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாஸ இந்த நிபந்தனைகளை அறிவித்தார்.

"பிரச்சினைக்கான தீர்வை காண பேச்சுவார்த்தையை ஸ்ரீலங்கா அரசு ஆரம்பிக்க விரும்புகிறது. ஆனால் தமிழர் இயக்கங்கள், தாம் வன்முறையைக் கைவிடுவதாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

தனி ஒரு இயக்கம் மட்டும் பேச்சுக்களில் கலந்து கொண்டால் போதாது மற்றைய தமிழ்க்குழுக்கள் அனைத்தும் பேச்சில் கலந்து கொள்ள வேண்டும்.

அவ்வக் குழுவின் அதிகாரமுள்ள தலைவரே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவேண்டும்" என்பது உட்பட மூன்று நிபந்தனைகளை ஜனாதிபதி அறிவித்தார்.

காலஞ்சென்ற பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்த அதே நிபந்தனைகளையே ஜனாதிபதியும் மீண்டும் அறிவித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மடு அகதி முகாமில் உணவின்றி மக்கள் அவதி

மடு அகதி முகாமில் தற்போது 38,000 க்கும் மேற்பட்ட அகதிகள் உணவு, மருந்து மற்றும் சுகாதார வசதிகள் இன்றிப் பெரும் துன்பப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலிருந்தும் பெருந்தொகை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கல்வித் திணைக்களத்தில் பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ் கல்வித்திணைக்களத்தில் முகவரி இன்றி பெயர் மட்டும் உள்ள க. பொ. த. முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறும் கல்வித் திணைக்கள தகவல் பிரிவு அறிவித்துள்

## யாழ் தமிழ்த்தினப் போட்டி அடுத்த மாதம் நடைபெறும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்டரீதியான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் மே மாதத்தில் நடாத்தப்படவுள்ளதாக பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

இதுவரை கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டு முதலாம் இடங்களைப் பெற்ற சகல

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக ஆளுநர் -தூதுவர் ஜா சென்னையில் பேச்சுவார்த்தை

## திருமலைத் தாக்குதல் 5 படையினர் பலி; ஆயுதம் மீட்பு

திருமலை மாவட்டம் குரங்குப்பாலம் (மங்கி பிரிட்ஜ்) இராணுவ முகாமில் இருந்து விளாங்குளம் முகாமுக்கு சென்ற இராணுவ அணிமீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இத்தாக்குதலில் 5 சிப்பாய்கள் பலியாகினர் புலிகள் தரப்பில் கப்டன்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை சுற்றிவளைப்பு வயோதிபர்களும் கைது

திருமலை மாவட்டத்திலுள்ள மூதூர், பள்ளிக்குடியிருப்பு, கட்டைபறிச்சான் ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் சூடைக்குடா, சம்பூர், இலக்கந்தை, கூனித்தீவு, கடற்கரைச்சேனை, சம்புக்களி, இத்திக்குளம் ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்தனர்.

கடந்த செவ்வாயன்று

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பூவரசங்குளம் ராணுவம் பாவற்குளம் திரும்பியது

வவுனியா மாவட்டத்திலுள்ள குருக்கலூர், பூவரசங்குளம், சாலம்பைக்குளம், இராமையன்கல் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் வாரிக்குட்டியூர் ஊடாக பாவற்குளம், உலுக்குளம் ஆகிய முகாம்களிற்கு திரும்பிச் சென்றுவிட்டனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மினிபஸ் மீது குண்டு வீச்சு

கடந்த புதனன்று காலை 9 மணியளவில் மன்னார் பரப்புக் கடந்தானில் வீதியால் சென்றுகொண்டிருந்த மினிபஸ் மீது குண்டு வீச்சு விமானம் தாக்குதலை நடாத்தியது இத்தாக்குதலில் மினிபஸ் முற்றாக சேதமடைந்தது.

இதில் பயணஞ் செய்த பொதுமக்கள் பாதுகாப்பு தேடிக் கொண்டதால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71 ப- 85)

## ஜனாதிபதி உரை

யாழ் கல்வித்திணைக்களத்தில் முகவரி இன்றி பெயர் மட்டும் உள்ள க. பொ. த. (உ/த) விசேட பரீட்சை அனுமதி அட்டைகள் உள்ளதாகவும் அவற்றை பரீட்சைக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறும் கல்வித் திணைக்கள தகவல் பிரிவு அறிவித்துள்ளது.

ரி. கௌரிசங்கர், இருஷ்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இம்முறை வந்த அரிசி மூடை 100 கிலோ எடையுள்ளது

கிலி கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட அரிசி மூடைகள் ஒவ்வொன்றும் 100 கிலோ எடையுள்ளவையாக இருப்பதனால் இவற்றைக் கப்பலில் இருந்து இறக்கி லொறிகளுக்கு ஏற்றுவதில் பல சிரமங்களை தொழிலாளர் எதிர்நோக்குகின்றார்கள். நான்கு அல்லது ஐந்து தொழிலாளர்களின் ஒத்துழைப்புடனேயே ஒரு மூடையை இவ்விதம் லொறிகளுக்கு ஏற்றுவதனால் இறக்கும் பணிகள் தாமதமடைவதாக இப்பணிகளுக்குப் பொறுப்பான ஒருவர் தெரிவித்துள்ளார் (66)

## வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்து திருடப்படுகிறது

வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக மரணங்கள் சம்பவித்துள்ளதென்றும் இம்மருந்துத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் திருட்டு எனவும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இவ் ஆஸ்பத்திரி இருந்தும் அடிக்கடி மருந்துத் தட்டுப்பாடும் திருட்டுச்சம்பவங்களும் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அத்தியாவசிய நோயாளிகள் பலர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (38)

## தமிழக ஆளுநர் - தூதுவர் ஜா சென்னையில் பேச்சுவார்த்தை

தமிழக மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையால் தாக்கப்படுவது குறித்து தாம் ஸ்ரீலங்கா அரசிடம் முறையிடவுள்ளதாக தூதுவர் ஜா தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங் உடன் தூதுவர் ஜா பேச்சுகளை நடாத்திய போது மீனவர்கள் தாக்கப்படுவதாக ஆளுநர் தெரிவித்தார்.

பேச்சுக்களின் போது இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்துப் இருவரும் பேச்சு நடாத்தியுள்ளனர்.

## பிரான்ஸ் சென்ற ஐவர் சிங்கப்பூரில் இருந்து திரும்பினர்

கொழும்பிலிருந்து பிரான்ஸிக்கு ஏஜன்சியால் அனுப்பப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த ஐந்து பேர் சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்க விமானநிலையத்திற்குதிருப்பி அனுப்பப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலீஸாரினால் விசாரிக்கப்பட்டு விடுதலை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஐ. தே. கட்சியில் சேர்ந்தனர்

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் மூவர் ஐக்கிய தேசிய கட்சிக்குச் சேர்ந்த சம்பவம் அனுராதபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

அடுத்தமாதம் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் இங்குள்ள பிரதேசசபை ஒன்றுக்கு போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களே இவ்வாறு கட்சி மாறியுள்ள

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி உரை சுதந்திரக்கட்சி பகிஷ்கரிப்பு

நேற்றுக்காலை பாராளுமன்றத்தின் மூன்றாம் கூட்டத் தொடரில் ஜனாதிபதியின் சம்பிரதாயபூர்வ உரையை சில எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, நவசமசமாஜக்கட்சி உட்பட சில எதிர்க்கட்சிகள் இந்தப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

இதேவேளை சில தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரசும் பாராளுமன்றம் சென்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உணவு முத்திரை பெறுவோரை இனங்காணும் திட்டம் ரத்து

உணவு முத்திரை பெறுவோரை மீண்டும் இனங்காணல் சம்பந்தமாக வறுமை நிவாரண ஆணையாளரால் 25-02-91ல் அனுப்பிவைக்கப்பட்ட 48வது இலக்கச் சுற்று நிருபம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வறுமை நிவாரண ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இச்சுற்று நிருபம் தொடர்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## திருநாவுக்கரசு கட்சிக்கு தி.மு.க இடம் ஒதுக்கியது

அ. தி. மு. க வில் இருந்து பிரிந்து சென்ற முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு தலைமையிலான கட்சிக்கும் எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தலில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒன்பது சட்டப்பேரவை தொகுதிகள் திருநாவுக்கரசு அணிக்கு தி. மு. க வழங்கியுள்ளதாக அதன் தலைவர் மு கருணாநிதி நேற்று அறிவித்தார்.

### இட்டு விளக்குகிறார்

# நான் புலியாக, புரட்சிக்காரனாக மாறிய சூழ்நிலை எத்தகையது?

"ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகள் போக நம்மால் ஏதாவது செய்ய முடியாதா என்ற எண்ணமே என்னைப் புலியாக புரட்சிக்காரனாக மாற்றியது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதி முக்கியஸ்தர்களில் ஒருவரும், லண்டனில் புலிகள் இயக்க அலுவலகப் பேச்சாளராக உள்ளவருமான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் 'கிட்டு' அளித்த சிறப்புப் பேட்டி ஒன்றினை தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

அப்பேட்டியில் திரு. கிட்டுவை அவ்விதழ், "கிட்டு பிறந்த ஊர் - ஈழ விடுதலைப் போர்த் தளபதிகள் பலரை அளித்த வல்வெட்டித்துறை" என்று குறிப்பிட்டுள்ளது.

திரு. கிட்டு அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் கல்வி கற்றுக் கொண்டிருந்தவேளை வல்வெட்டித்துறையில் நடந்த சிங்கள இராணுவக் கொடுமைகளைக் கண்டு திடுக்கிட்டேன். என் உள்ளம் பதறியது அதோடு தரப்படுத்தல் விடயத்தில் சிங்களவருக்கு ஒரு முறை தமிழருக்கு ஒரு முறை என்று தரம் பிரித்ததும் கொதிப்படைய வைத்தது. அப்போது சித்தாந்த ரீதியான சிந்தனை எதுவுமில்லை, இந்தக் கொடுமைகள் போக நம்மால் ஏதாவது செய்ய முடியாதா என்ற எண்ணமே என்னைப் புலியாக, புரட்சிக்காரனாக்கியது இப்போது கூட கணக்கற்ற மாணவர்கள் எங்கள் இயக்கத்தில் துப்பாக்கி ஏந்தி இருக்கிறார்கள். தங்கள் இனத்தைக் காக்கும் துடிப்பு அவர்கள் இதயத்தில்.

**தலைவரைப்பற்றி...**

தலைவர் பிரபாகரன் என்னைக் கவர்ந்தவர். அவர் ஒரு போதும் வாக்குத் தவற மாட்டார். நேர்மையானவர் அவரைத் தலைவர் என்ற மதிப்பைவிட குருவாகவும் தந்தையாகவும் நினைக்கிறேன். 1983 இல் சிங்கள இராணுவச் சிப்பாய்களை வழி மறித்துத் தாக்கும் திட்டத்தில் என்ன தடுத்தும் பிரபாகரனே தலைமை தாங்கியதும் அன்று ஆபத்தான நிலையில் சிங்களவரைக் கதிகலங்கச் செய்து பிரபாகரன் தோழர்களைக் காத்ததும் நினைவைவிட்டு அகலாது. இச்சம்பவத்திற்குப்பின் அவர் பற்றிய மதிப்பு மிக உயர்ந்தது".

### கூட்டுறவுத்துறைக்கு உத்தரவு

# தேர்தலில் போட்டியிடுவோர் பதவி விலகவேண்டும்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட கூட்டுறவுச் சங்கத்தலைவர் அல்லது இயக்குநர்சபை உறுப்பினர்கள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்திருந்தால் தங்கள் பதவிகளிலிருந்து உடன் விலகவேண்டும் என உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி சுற்றுநிருபம் மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் இத்தேர்தலுக்கு கூட்டுறவு வாகனங்களையோ கூட்டுறவு உடைமைகளையோ உபயோகிக்கக் கூடாது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்கள் இத்தேர்தலில் போட்டியிட நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்தால் தேர்தல் முடியும்வரை சம்பளமற்ற லீவில் செல்லுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (88)

# பூநகரியில் உப்பு விளைச்சல்; கிலோ ரூபா 5 ஆகவிற்பனை

பூநகரி கறுக்காய்தீவு புலியடிக்களப்பில் உப்பு அதிகளவில் விளைந்துள்ளது. இதனை அப்பகுதி மக்கள் அள்ளி கிலோ 5 ரூபாப்படி விற்பனை செய்கின்றனர்.

இம்முறை உப்பின் விலை அதிகரித்துள்ளமையால் சிறுவர்கள், தொடக்கம் முதியவர்கள் வரையும் கால்நடையாகச் சென்று பெட்டிகளிலும், கூடைகளிலும், மூடைகள், உரைப்பைகளிலும் தினசரி அள்ளி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனை மோட்டார் சைக்கிள், சைக்கிள் வியாபாரிகள் வந்து பெற்றுச் செல்கின்றனர். (ப-35)

# சனசமூக நிலையங்களுக்கு அரச நன்கொடைப் பணம்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் 1989, 1990 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அரச நன்கொடைப் பணம் எதுவித நிபந்தனைகளுமின்றிச் சகல சனசமூக நிலையங்களுக்கும் வழங்கப்படுமென்று பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகரனா அறிவித்துள்ளார்.

இந்நன்கொடைப் பணம் அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது,

இந்நன்கொடையை 1989 ஆம் ஆண்டு வரை எவ்வித தஸ்தாவேஜும் பரிசீலனை செய்யாது வழங்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கான நன்கொடைப் பணம் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபார்சின்படி வழங்கப்படும்.

சகல சனசமூக நிலையங்களும் தமது நன்கொடைப் பணத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ளும்படியும் மே மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் இந்நன்கொடைப் பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (36)

## கரப்பந்தாட்டம்

மறைந்த இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் அமரர் வி. பரராஜசிங்கத்தின் ஞாபகார்த்தமாக நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகம், ஆறுபேர் பங்கு பற்றும் மென்பந்துப் போட்டி நான்கு பேர் பங்குபற்றும் கரப்பந்தாட்டப் போட்டி, ஆகிய பல போட்டிகளைப் பரந்தளவில் நடத்தவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் இப்போட்டிகளில் பங்குபற்றலாம் என்றும் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உரிய முறையில் தமது விண்ணப்பங்களை நொதேண் விளையாட்டுக்கழகம், ஆலடி ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது. (16)

# கிளிநொச்சியிலும் அன்னைக்கு உருக்கமான அஞ்சலி

கிளிநொச்சியில் அன்னை பூபதி நினைவாக கிளிநொச்சி நகரம், திருநகர், கனகபுரம், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், வட்டக்கச்சிப்பகுதியில் உள்ள கிராமங்கள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன

இதே போன்று இங்குள்ள பாடசாலைகளில் மாணவர்களால் அன்னை பூபதியின் நினைவாக உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ப-6)

## உபகரணங்கள்

வேலணையில் இயங்கும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 8 லட்சம் ரூபா நிதியைக் கொண்டு அவ்வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்க யாழ் சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் வைத்தியசாலைக்குப் புதிய கட்டிடம் அமைக்கவே இந்நிதி அனுப்பப்பட்டதாகவும் தற்போது மருத்துவ உபகரணங்களுக்கு இவ்வைத்தியசாலையில் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

# கொழும்பு இளைஞர்க்கு இப்போது 'ஜெக்பொட்' மயக்கம்

கொழும்பு இளைஞர்கள் ஜெக்பொட்டில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்களாம்

இதுபற்றி கொழும்பு நாளிதழ் ஒன்று தன் ஆசிரியத் ... றது.

'ஜெக்பொட்' உள்ள இடங்களில் குறிப்பாக தேநீர் கடைகளில் அதிகாலை ஐந்தரை மணிமுதல் இரவு ...

# அமெரிக்க விஞ்ஞானிகளை கலக்கும் 'கொசு'

'எய்ட்ஸ்' பற்றி ஏராளமான சர்ச்சைகள் நடந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில், சர்ச்சையில் நுழைந்திருக்கும் லேட்டஸ்ட் ஆசாமி—'மிஸ்டர் கொசு'! கொசு மூலமாக எய்ட்ஸ் பரவுமா, பரவாதா என்பதுதான் அமெரிக்க விஞ்ஞானிகளின் தற்போதைய தலையாய பிரச்சினை. இது சம்பந்தமாக காரசாரமாக மோதிக் கொள்கிறார்கள்.

கொசு எய்ட்ஸைப் பரப்புகிறதுஎன்று தன்னால் நிரூபிக்க முடியும் என்றார் ஒயிட்சைட் என்ற விஞ்ஞானி கொசுவைப் பிடித்து ஒரு எய்ட்ஸ் நோயாளியின் ரத்தத்தை உட்கொள்ளச் செய்து, சில நாட்கள் கழித்துக் கொசுவின்வயிற்றை ஆராய்ந்த போது, எய்ட்ஸ் வைரஸ் அப்படியே உட்கார்திருப்பது தெரிய வந்தது. எனவே இந்தக் கொசு அடுத்தவரைக் கடிக்கும் போது இதன் மூலம் எய்ட்ஸ் பரவும் என்பது ஒயிட்சைடின் வாதம். இதை உறுதி செய்கிற வகையில், ஓர் உதாரணத்தையும் சொல்கிறார் அவர். "மலேரியா நிறையப்பேருக்கு வருகிற ஆப்பிரிக்க நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கெல்லாம் பெரும்பாலான எய்ட்ஸ் நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்த்தபோது 'ஹோமோசெக்ஸ்' போன்ற எந்தக் காரணமும் தென்படவில்லை எனவே கொசுதான் காரணமாக இருக்க முடியும்" என்கிறார் அவர்.

உடனேயே இதை மறுத்து இன்னொரு கோஷ்டி தீவிர ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. கொசுவின் வயிற்றில் எய்ட்ஸ் வைரஸ் பல நாட்கள் உட்கார்ந்திருக்கலாம் ஆனால் அது பரவுவதில்லை. ஏனென்றால், மலேரியாவைப் பொறுத்தவரைதன் எச்சில் மூலமாகவே கிருமிகளைக் கொசு பரப்புகிறது ரத்தம் மூலம் அல்ல. மேலும் மலேரியாவை எடுத்துக் கொண்டால், குழந்தைகளில் ஆரம்பித்துக் கிழவர்கள் வரை எல்லோருக்கும் வருகிறது. ஆனால் எய்ட்ஸ் பெரும்பாலும் முதியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் வருவதில்லை. எனவே, கொசு எய்ட்ஸ் பரப்பச் சாத்தியமில்லை என்கிறார்கள் இவர்கள். பட்டிமன்றம் தொடர்ந்து கொண்டிருப்பதால் இப்போதைக்கு நடுவர் தீர்ப்பு சாத்தியமாகத் தெரியவில்லை!

## தமிழக தேர்தல் களம்

### எஸ். எஸ். ஆர் மகனும் அ. தி. மு. க. சார்பில் போட்டி

திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவரும், பிரபல நடிகருமான எஸ். எஸ். ராஜேந்திரனின் மகன் எஸ். எஸ். ஆர். ராஜேந்திரகுமார் அ. இ. அ. தி மு க வேட்பாளராக சட்டசபைத்தொகுதி ஒன்றில் போட்டியிடுகிறார்.

ராஜேந்திரன் கலைஞர் மு கருணாநிதியுடன் அரசியல் கருத்து வேறுபாடு கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது

### இந்தியாவில் ரௌடிகள் அமைதி குலைக்க முயற்சி

"இந்தியத் தேர்தலுக்கு முன்பாகவே காடையர்களும் பல ஆயுதபாணிகளாகின்றன" என்று பி.ரி. ஐ செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது

அடுத்த மாதம் தேர்தல் நடைபெறுவதற்கு வன்செயல்கள் அதிகமாக வெடிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன என்று தலைமைத் தேர்தல் கமிஷனரே கூறியுள்ளது தெரிந்ததே.

சட்ட விரோதத் துப்பாக்கிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை உரிமையாளர்கள் அவற்றைக் கொடுத்து உள்ளூர் ரௌடிகளை ஆயுத பாணிகளாக்கத் தொடங்கியுள்ளனர் என்று பி. ரி. ஐ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

செய்திருந்தால் தேர்தல் முடி

## முரசொலிக்கு வந்த கடிதம்

# கவிதைப்பட்டறை

ஆசிரியர்
'முரசொலி'

எனது அபிமானப் பத்திரிகையான முரசொலியில் 11.04.1991 தொடக்கம் 13.04.1991 வரை 'கவிதைப் பட்டறை மீதான ஒரு கண்ணோட்டம்' என்னும் பயனுள்ள தொடரைப் பிரசுரித்தீர்கள்; பாராட்டுகிறேன்.

கடந்த மாதம் கலை இலக்கியக் களம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கவிதைக்கென நடாத்திய பட்டறை வகுப்பில் கலந்து கொண்ட எண்பது இளம் கவிஞர்களுள் யானும் ஒருவன்.

கண்ணோட்டம் பிரசுரமான மூன்று நாள் பத்திரிகையையும் படித்தாலே கவிதை எழுதும் வல்லமை வந்து விடும் தங்கள் பத்திரிகை மாணவரின் கல்விக்கும். கவிவளர்ச்சிக்கும் அரும்பணி ஆற்றி வருவதைக் காண்கிறேன்.

இளவாலை மு. தேவதாஸ்

முக்கிய குறிப்பு

ஆசிரியருக்குக் கடிதம் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயரையும், முகவரியையும் குறிப்பிடுவதோடு கையொப்பமும் இடவேண்டும்.

இந்த நடை முறையைப் பின்பற்றாத கடிதங்கள் பிரசுரிக்கப்படா.

— ஆசிரியர்

ஜெக்பொட்டில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்களாம்

இதுபற்றி கொழும்பு நாளிதழ் ஒன்று தன் ஆசிரியத் தலையங்கத்தில் இதுபற்றிச் சுட்டிக்காட்டியுள்ளது

பாடசாலைப் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு வந்தவர்களும், வேலையில்லாத இளைஞர்களும் இப்போது போதைப் பொருளுக்கு அடிமையாகியும், களவுகளிலும் ஈடுபட்டு வருவதுடன், ஜெக்பொட்டை (ஓர் வகை சூதாட்டம்) முற்றுகையிட்டு வருவதையும் காண முடிகி

'ஜெக்பொட்' உள்ள இடங்களில் குறிப்பாக தேநீர்க் கடைகளில் அதிகாலை ஐந்தரை மணிமுதல் இரவு வரை ஜெக்பொட் வியாபாரம் நடைபெறுவதுடன், இளைஞர்கள் பலர் இந்த இடங்களில் பொழுதைக் கழித்து வரும் அவல நிலையும் உள்ளது. பெற்றோரிடமிருந்து கிடைக்கும் பணமும், திருடப்படும் பணமும் 'ஜெக்பொட்' கருவிகளில் உபயோகிக்கப் பட்டு வருகின்றன என்று இந்த ஆசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. (50)

## முறைசாராக் கல்வி இன்று கூட்டம்

யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பத்திரிகைப் பயிற்சி நெறிப் பயிலுநர்களுக்கும், போதனாசிரியருக்குமான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 00 மணிக்கும் முறைசாராக் கல்விப் பிரிவு சகல போதனாசிரியர்களுக்கும், முதலுதவி நிலையங்களில் நிர்வாக உறுப்பினர்களுக்குமான கூட்டம் முற்பகல் 10.00 மணிக்கும் யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். சகலரையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.


## சிறு விளம்பரம்

### சேவை

உங்கள் பெறுமதி மிக்க புத்தகங்கள் கொப்பிகள் மற்றும் உங்கள் தொகுப்புக்கள் அனைத்தும் மிக அழகான முறையில் (பைண்டிங்) கட்டிக் கொடுக்கப்படும். நூலகங்களுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் குறைந்த சலுகையில் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தக சாலை, 255 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 04041


சாலை உரிமையாளர்கள் அவற்றைக் கொடுத்து உள்ளூர் ரௌடிகளை ஆயுத பாணிகளாக்கத் தொடங்கியுள்ளனர் என்று பி. ரி. ஐ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

## 'டாக்டர் சுவாமி என்ன காங்கிரஸ்காரரா'

மத்திய அமைச்சரவையைச் சேர்ந்தவரும், மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி எதிர்வரும் தேர்தலில் எந்தக் கட்சியில் போட்டியிடப் போகிறார் என்பது மர்மமாக உள்ளது.

அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் இணைந்து அவர்செயற்பட முனைந்துள்ளார். என்று சமீபத்தில் செய்தி வெளியானது.

டாக்டர் சுவாமிக்கு ரிக்கற்கிடைக்குமா? என 'ராஜீவ் காந்தியிடம் செய்தியாளர்கள் நேற்று முன் தினம் கேட்டபோது, அவர் என்ன காங்கிரஸ்காரரா? என அவர் திருப்பிக்கேட்டார்.


உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது!

# ஜெசீத்தாரா உள்ளூர் உணவகம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் அமைந்திருக்கின்றது.

சுகாதாரமான சுவையான உணவு வகைகளுக்கும் மற்றும் சிற்றுண்டி ஓடர்களுக்கும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

இத்திப்பான உணவுப் பார்சல்கள் ரூபா 25/- மட்டுமே.

19/3 கொழும்புத்துறைசாலை, சுண்டிக்குளி.

04056

# 'இம்மண்ணின் பாரம்பரிய பெருமை பெற்ற சுதேச வைத்தியத்தைப் பேணல் நம்கடமை'

"சித்தவைத்தியம் மக்களின் பாரம்பரிய வைத்தியம். சித்தவைத்தியத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நாம் எல்லா வகையிலும் ஊக்கமும் உதவியும் அளிக்கவேண்டும். எமது காலத்தில் முன்னேற்ற முடியாவிடின் எமக்கு இழுக்கை ஏற்படுத்தும்.சித்தவைத்தியத்துறை வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகம் எல்லா உதவிகளும் செய்யக் காத்திருக்கிறது."

இவ்வாறு கைதடி யாழ் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'சுதேசியன்' பத்திரிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் துணைவேந்தர் துரைராஜா கூறினார்.

இந்த விழாவிற்கு டாக்டர் சோ. சபாநாதன் தலைமை தாங்கினார். சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

துணைவேந்தர் மேலும் பேசுகையில், "அந்நியர் ஆட்சிக் காலத்தில் சுதேச வைத்தியத்துறை புறக்கணிக்கப்பட்டது அதற்குரிய இடம் அளிக்கப்படவில்லை. அரச ஆதரவு இருக்கவில்லை. இந்த மண்ணில் பாரம்பரிய வைத்தியத்துறையான சுதேச வைத்தியத்தை வளர்ப்பது வைத்தியர்களினதும், பல்கலைக் கழகத்தினதும் பணியாகும்" என்றும் கூறினார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய சித்தவைத்தியத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானி "வைத்தியர்களின் அனுபவ ரீதியான ஆக்கங்களைசுதேசியன் பத்திரிகை மூலமாக வெளிக்கொண்டுவர வேண்டும். சுதேச வைத்தியத்துறைக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து கிடைப்பதற்கும் வைத்தியர்களே காரணமாக இருந்தனர்" என்றார்.

இவ்விழாவில் திருமதி எம். தவத்துரை, வைத்தியர் க. இராமசாமி, மாநகர ஆணையாளர் பாலசிங்கம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். மட்டுவிலைச் சேர்ந்த டாக்டர் பே பிலிப்ஸ் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

## போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை

# நாஸ்திகரையும் ஆஸ்திகராக மாற்றவல்லது - சிவத்தமிழ்ச்செல்வி

"அந்நியரின் ஆட்சிக் காலத்திலேயே வழிபடு தெய்வமாக வைத்துப் போற்றப்பட்ட இக்கோவிலின் பழமையைத் தமது பூர்வீகத்தாரின் ஆத்மீக வாழ்வோடு இணைத்துக் கூறியுள்ளார் இந்நூலாசிரியர் மேலும் பூசகர்கள், பூசை முறைகள், நித்திய நைமித்திய ஒழுங்குகள், பிள்ளையாரின் அற்புதங்கள், அரச மரத்தின் தெய்வீகம் ஆகியவற்றை ஆசிரியர் காட்டிச் சொல்லும் போது நாஸ்திகர் கூட ஆஸ்திகராக இடமுண்டு என்றே கூறலாம்"

மேற்கண்டவாறு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அனைத்துலக ஆசிரியர் இ சங்கரப்பிள்ளை எழுதிய அச்சுவேலி-தோப்பு, போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை என்ற நூலுக்கு வழங்கியுள்ள வாழ்த்துரையில் கூறியுள்ளார்.

# தென் மாகர்ண ஆசிரியர் ஐவருக்கு இங்கு இடமாற்றம்

தென் மாகாணப் பாடசாலைகளில் அதிக காலம் கடமையாற்றிய ஐந்து ஆசிரியர்களுக்கு யாழ் கல்விப் பிராந்தியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களது பெயர் தற்சமயம் படிப்பிக்கும் பாடசாலைகள், இடமாற்றம் பெற்றுள்ள யாழ் பாடசாலைகளின் விபரம் என்பன யாழ் கல்விப் பணிமனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உடனடி நடவடிக்கை மேற்கொண்டு இவர்களது இடமாற்றங்களைச் செய்யுமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் வட, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் பணிக்கப்பட்டுள்ளார். (78)

# 'இராணுவத் தீர்விலேயே அரசாங்கத்தின் செயற்பாடு'

"அரசியல் தீர்வல்ல சமாதானத்திற்கான பாதை இராணுவத்தீர்வே" என்ற நிலையில் காரியங்கள் தொடர்கின்றன. அரசியல் சக்திகளும் மௌனம் சாதிக்கின்றன என்று கொழும்பு நாளிதழ் ஒன்று தனது ஆசிரியத் தலையங்கத்தில் கூறியுள்ளது.

"இன்று நாட்டில் மலிந்து வரும் கொலைகளும், கொலைக்கலாசாரமும் தொடர்வது துரதிர்ஷ்டவசமானது. அப்பாவி மக்களைப் பகடைக்காய்களாக்கி நடைபெறும் கொலைகள் கண்டனத்திற்குரியவை, என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (50)

## வெற்றி தோல்வி இல்லை

சமீபத்தில் யாழ் மத்திய கல்லூரிக்கும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் சென்றல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி மழையினால் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 63 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டமிழந்தது. இதில் அரசரட்டினம் பெற்ற ஓட்டங்கள் 16. மற்ற எந்தவொரு வீரரும் குறிப்பிடத்தக்களவு ஓட்டங்களைப் பெறவில்லை.

சென்றல் கல்லூரி அணி தனதுதுடுப்பாட்டத்தில் சகல விக்கற்றுகளையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது.

சென்றலைட்ஸ் அணி தனது இரண்டாவது இனிங்சில் 7 விக்கற்றுகளைப் பறிகொடுத்து 180 ஓட்டங்களைப் பெற்று ஆடிக்கொண்டிருக்கையில் பெய்த கடும் மழையினால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. (16)

# நவீன அச்சு இயந்திரம்; சர்வோதய முயற்சி பலிதமில்லை

சர்வோதய இயக்கம் நவீன முறையிலான பல வசதிகளை உள்ளடக்கிய அச்சு இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்ய மேற்கொண்ட முயற்சி பலிதமாகவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே தடவையில் ஆறு வர்ணங்களை அச்சடிக்கக் கூடிய இந்த இயந்திரத்தின் விலை சுமார் ஒன்றேகால் கோடி ரூபாவாகும்.

தேசிய அபிவிருத்தி வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்ட போது முன்பு பெற்ற கடன்கள் தீர்க்கப்படாமல் உதவி செய்ய முடியாது என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டுவிட்டதாம். (16)

## இன்று அஞ்சலிக் கூட்டம்

சிலாவத்துறை இராணுவ [illegible]

# கடற்படை அட்டகாசத்தால் மீன்பிடித் தொழில் பாதிப்பு

வடமராட்சி கிழக்கில் கடற் [illegible]

வடமராட்சி கிழக்குப் [illegible]

## புளியங்கூடலில் செஞ்சிலுவைக் கிளை

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவி [illegible]

---

உணவு உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டிய காலம் இது. மண்ணெண்ணெய் இல்லை. உரம் இல்லை. இருந்தும் ஒரு தோட்டம் பசுமையாக இருந்தது. களையெடுத்துக் கொண்டிருந்த விவசாயி ஒருவரை அணுகினேன். அவர் மகிழ்ச்சியுடன் உரையாடினார். அவர் பெயர் செ. இலங்கைநாதன், இணுவிலைச் சேர்ந்தவர்.

# போர்க்காலத்தில் உணவுற்பத்தி

கேள்வி: போர்க்காலச் சூழ்நிலையில், பொருளாதாரத் தடை இருக்கும் இவ்வேளையில் உணவு உற்பத்தியில் விவசாயிகளின் பங்களிப்பு மிக முக்கியம். தற்போது நிலவும் நெருக்கடியை எப்படிச்சமாளிக்கலாம்?

பதில்: '1941 இற்கு முன்பு யாழ் விவசாயிகள் உணவுப் பயிர்களையே செய்தார்கள். உணவுப்பயிர் இரண்டு வகைப்படும் ஒன்று மரக்கறி, மற்றது சிறுதானிய வகை. சிறுதானிய வகையில் குரக்கன், தினை, சாமை ஆகியன அடங்கும். நான் சிறுவனாக இருந்த காலத்தில், மக்கள் அரிசிச் சோறு சாப்பிடுவது குறைவு நல்ல நாள் பெருநாளில் (அல்லது) வீட்டில் இறைச்சி காய்ச்சினால் மட்டும் சோறு மற்ற நாட்களில் சாமை வரகு போன்றவைதான் இரவுச் சாப்பாடு. குரக்கன் பிட்டு அல்லது சாமைச்சோறு, கிழங்கு வகைகளும் உண்டு. ஆனால் இப்ப எல்லாமே மாறீட்டுது அப்ப சோதம்பமாவே இல்லை. காலம் மாறச் சாப்பாட்டுவகையும் மாறீட்டுது உணவுப்பயிரான இந்தத் தானிய வகைக்குப் பதிலாகப் பணப்பயிரைச் செய்யத் தொடங்கினர் பணப் பயிர்ச் செய்கையை விவசாயக் கந்தோரும் ஊக்குவித்தது. நாங்கள் மீண்டும் பழைய காலத்துக்குப் போக வேணும். குரக்கன், சாமை, வரகு போன்ற சிறுதானியம் பயிர்களைச் செய்ய வேணும்.

கே: நீங்கள் குறிப்பிட்ட சிறுதானியங்களை விவசாயிகள் பயிரிடுவதை ஏன் நிறுத்தினார்கள்?

ப: கப்பலரிசி வந்திட்டுது, கோதம்பமா வந்திட்டுது. சனம் சிறுதானியத்தைத் தேடேல்லை. பிறகேன் விவசாயி பயிரிடப்போகிறான்? பணப்பயிரான புகையிலை, வெங்காயம், மிளகாய் நல்ல பலனைத் தந்தன இப்ப மா இல்லை. அரிசி விலையே எக்கச் சக்கம். சிறுதானியம் தான் எங்களுக்குக் கை கொடுக்கும்.

கே: வாழ்க்கைமுறை மாறினதால் இப்ப கஷ்டப்படுகிறோம் இந்தச் சிறுதானியச் செய்கையில் செலவு ,இலாபம்?

ப: உணவு விடயத்தில் வெளியார் உதவியை எதிர்பாராது. நாங்கள் ஓரளவுக்குத் தன்னிறைவு காண இந்தச் சிறுதானியம் கை கொடுக்கும். இதற்குக் கிருமிநாசினி, உர வகை போன்றவை தேவையில்லை. அந்தச் செலவுகள் இல்லை.

கே: சிறுதானியங்களுக்கும் நீர்ப்பாசனம் தேவை தானே?

ப: மேட்டுப்பயிர்ச்செய்கைக்கு நீர்ப்பாசனம் அவசியம். இவற்றை வயலில் பயிரிடும்போது பருவத்தை அனுசரித்துப் பயிரிட வேண்டும். அறுவடை முடிந்த கையோடு விதைத்தால், இப்பயிர்கள் நன்றாக வளர்வதற்கு ஏற்ற ஈரலிப்பு வயல் நிலத்திலிருப்பதால் அவை செழிப்பாக வளரும்.

கே: சிறுதானிய உணவு வகையோடு மரவள்ளியையும் நாம் பயன்படுத்தலாம். மரவள்ளிச் செய்கை பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்?

ப: இது ஒரு நல்ல உணவுப் பொருள். விலையும் குறைவு. உணவாகத் தயாரிக்கும் முறையும் சுலபம். கறியின்றிச் சாப்பிடக் கூடியது. மத்தியவர்க்கக் குடும்பங்களுக்கு ஒரு நேர உணவைப் பூர்த்தி செய்யும். மரவள்ளிச் செய்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதற்கும் அதிகம் செலவில்லை. கிருமி நாசினி தேவையில்லை. மரவள்ளிக்குள் ஊடுபயிராகக் கீரை, பயறு முதலியன பயிர் செய்யலாம்.

கே: மற்றப்பயிர்களுக்கு வருவது போல மரவள்ளிக்கும் [illegible]

## அஞ்சலிக் கூட்டம்

சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் காஸ்ரோவுக்கும் அவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட அனைத்து வீர வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் மாபெரும் அஞ்சலிக் கூட்டமொன்று, இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 30 மணியளவில் யாழ் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது இந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

## மீன்பிடித் தொழில் பாதிப்பு

வடமராட்சி கிழக்கில் கடற்படைக் கப்பல்களின் அட்டகாசம் மீண்டும் அதிகரித்துள்ளதுடன் இரவு நேரங்களிலேயே கடற்படைக் கப்பல்களின் நடமாட்டங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

சில தினங்களுக்கு முன் சுண்டிக்குளம் பகுதியில் இக் கடற்படைக் கப்பல்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

இரவு நேரங்களில் கடற்படைக் கப்பல்கள் நடமாடித் திரிவதால் மீனவர்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியை நோக்கி வெளிச்சக் குண்டுகள் ஏவப்படுகின்றன. அத்துடன் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. (34)

## செஞ்சிலுவைக் கிளை

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புளியங்கூடலில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைப் பணிமனை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## கல்வி வாய்ப்பை அதிகரிக்க புதிய திட்டம் தயாரிப்பு

வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

க. பொ. த. (உ. த) பரீட்சையில் சித்திபெறும் பெருந்தொகையானோருக்குக் கல்வி பெறும் வாய்ப்பை அதிகரிப்பதற்கு கல்வி, உயர் கல்வியமைச்சு புதியதிட்டம் ஒன்றினைத் தயாரித்துள்ளதாகவும் இத் திட்டம் இவ்வருடத்திலிருந்து செயற்படுத்தப்படும் என்றும் மேலும் அறிய வருகின்றது.

## போட்டிப் பரீட்சை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த கலாசார உத்தியோகத்தர் பதவிக்கான தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பு- கம்பனித்தெருவில் உள்ள அலுவலகத்தில் போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வட, கிழக்கு மக்கள் ஜீவமரணப் போர்'

"வடக்குக் கிழக்கில் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுடன் உயிரை இழந்து, உடைமைகளை இழந்து வாழ்வுக்கும், சாவுக்கும் மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றனர்."

இவ்வாறு கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் நடைபெற்ற "லிபரல் வாதமும், மூன்றாவது மண்டல நாடுகளும்" என்ற தலைப்பிலான சர்வதேசக் கருத்தரங்கில் பேசுகையில் இந்து அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வே. கேந்திரா துரைசுவாமி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "நாம் இங்கு நட்சத்திர ஹோட்டலில் இருந்து கொண்டு நாட்டின் அரசியல் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்ற நேரம். வடபகுதியில் கடந்த பத்து மாதங்களாக மின்சாரமில்லை. மக்கள் இருளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் ஒரு பகுதி நெருப்பில் எரிந்து கொண்டிருக்கிறது. நாங்கள் பிடில் வாசிப்பதா?" என்றார். (16)

ஊடுபயிராகக் கீரை, பயறு முதலியன பயிர் செய்யலாம்.

கே: மற்றப்பயிர்களுக்கு வருவது போல மரவள்ளிக்கும் நோய் ஏதாவது பரவுவதுண்டா?

ப: சமீப காலங்களில் புதுவகை நோய் பாதிக்கத் தொடங்கியுள்ளது. மரவள்ளித் தடியின் உள் பாகத்தை அழுக்கணவன் பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த அழுக்கணவன் தடியின் ஈரப்பசுமையை உறிஞ்சுவதால் மரவள்ளிக் கட்டை பயனில்லாமல் போய்விடும். மரவள்ளியின் இனவிருத்திக்கு மரவள்ளிக்கட்டையே பயன்படுகிறது. மரவள்ளிக்கட்டை நடும் போது அழுக்கணவன் பிடிக்காத நல்ல கட்டையாகப் பார்த்து நடவேண்டும்.

கே: மரவள்ளிக்கு எப்படிப்பட்ட பசளை நல்லது?

ப: குப்பை தான் நல்லபசளை. குப்பை மண்ணை இறுக விடாது. அடவு இல்லாமல் இருக்கும் ஓலை வகை மிக நல்லது. பழைய ஓலை அல்லது பச்சை ஓலையை வெட்டிக்காயப் போட்டுத் தாழ்க்க வேண்டும். கூடிய கிழங்கு விளையும்.

கே: எரு போடக்கூடாதா?

ப: மரவள்ளிக்கு எரு நல்லதல்ல. எருவில் குறவணவன் புழு இருக்கும். மரவள்ளியின் வேர் அதுக்கு நல்ல சுவையூட்டும். வேரைப் புழு அரித்தால் கிழங்கு விளையாது.

கே: சில சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்குமளவுக்கு கிழங்கு விளைவதில்லை. இதற்குக் காரணம் என்ன?

ப: மரவள்ளிக் கட்டையை நடுமுன்பு நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும். போதிய பசளை இடவேண்டும். 3 அடி தூரத்தில் நடவேண்டும். இப்படிச் செய்தால் நல்ல பலனைப் பெறலாம். சிலர் வெங்காயப் பாத்தியில், வாழைப்பாத்தியி

— 4 ஆம் பக்கம் பார்க்க

# அன்னை பூபதிக்கு வடபகுதியில் பொதுமக்கள் திரண்டு அஞ்சலி

இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து தியாக மரணமடைந்த அன்னை பூபதிக்கு நேற்று வடபகுதி எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளில் அன்னை பூபதி நினைவாக அஞ்சலிக் கூட்டங்கள், பேச்சுப்போட்டி, அன்னதானம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல இடங்களில் அன்னையின் உருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இணுவிலில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. கன்னாகத்தில் துவிச்சக்கர பேரணி நடாத்தப்பட்டது.

முழங்காவில் மாவீரர் மைதானத்திலும் அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (48, ப-10, ப-35, 33, 70, ப-11)

## புதுவருட தினத்தன்று பலாலிக்கு சிறில் ரணதுங்கா விஜயம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா தனது பாரியார் சகிதம் புதுவருட தினத்தன்று பலாலி இராணுவ முகாமிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார் என கொழும்புப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர் பலாலியில் இருந்து காங்கேசன் இராணுவ முகாமிற்குச் சென்று அங்குள்ள திசவிகாரையில் புதுவருட சமய நிகழ்ச்சிகளில் படையினருடன் கலந்து கொண்டு பாற்சோறு உண்டார் எனவும் பின்பு கிழக்கு மாகாண இராணுவ முகாம்களில் உள்ள படையினரைச் சந்திக்க அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ப-10)

## கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அரச ஊழியர்களுக்கு முற்பணம் கிடைப்பதில்லை?

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பல அரச திணைக்களங்களில் ஊழியர்களுக்கான உற்சவ முற்பணம் விஷேட முற்பணம் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் பணம் கோரி இத்திணைக்களங்கள் திருமலை மாகாணசபைக்கு அனுப்புவதில்லையென திறைசேரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இக்கொடுப்பனவுகளைப் பெற்று உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு வழங்கினால் மாதாமாதம் கணக்குகளைப் பார்க்கும் வேலைப்பளு அதிகரித்துவரும் என்பதனாலேயே அதிகாரிகள் இப்பணத்தைப் பெறாமல் இருப்பதாக அரச ஊழியர் வட்டாரங்களில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (66)

## பல்கலைக்கழக பதவி உயர்வு யாழ்ப்பாணத்தில் பரீட்சை

யாழ் பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவினரின் பதவி உயர்வுக்கான பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இணங்கியுள்ளது.

இப்பரீட்சைகள் முன்னர் கொழும்பிலேயே நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சைகளை நடாத்த வேண்டியதன் அவசியத்தை யாழ் பல்கலைக்கழகம் மானிய ஆணைக்குழுவிடம் விளக்கியதை அடுத்து இங்கு நடாத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் பரீட்சை நடைபெறும் தினமான மே 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் இப்பரீட்சைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விணாத்தாள்களை குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னர் தொண்டர் நிறுவனங்கள் மூலம் அனுப்பி வைக்குமாறும் யாழ் பல்கலைக்கழகம் கேட்டுள்ளது. (70)

## கொழும்பு பயணிகள் செல்ல அனுமதி

கொழும்பு செல்லும் பயணிகள் நேற்று முத்திரைச்சந்தையில் பெருந்திரளாக நிற்கக் காணப்பட்டனர்.

கடந்த சில நாட்களாக கொழும்பு பயணம் தடைப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஏற்கனவே வவுனியா, ஓமந்தைப் பகுதிகளில் கொழும்பு செல்ல முடியாமல் நின்ற பயணிகள் நேற்று முன்தினம் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 33, 70

## இரண்டாவது தடவையாக செயற்கைக் கோள் வெடித்தது

அமெரிக்க கேப்கனவரல் ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்ட மூன்றரைக் கோடி பெறுமதியான ஜப்பானிய தொலைக்காட்சி செயற்கை கோள் வெடித்துச் சிதறிவிட்டது.

இந்த செயற்கை கோளை காவிச்சென்ற அற்லஸ் என்ற ரொக்கட்டின் இயந்திரம் ஒன்று இயங்கத்தவறியதனால் ரொக்கட்டுடன் சேர்ந்து செயற்கை கோளும் வெடித்து நாசமானது.

கடந்த ஆண்டு இவ்வாறு வெடித்துச் சிதறிய பிரெஞ் தொலைக்காட்சி செயற்கை கோள் ஏரியானுக்குப் பதிலாகவே இந்த ஜப்பானிய செயற்கை கோள் நேற்று முன்தினம் ஏவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## புலோலி கிராமிய வங்கியில் 3000 ரூபா கொடுப்பனவு

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி வாடிக்கையாளர்களுக்கு தலா 3,000 ரூபாவுக்கு மேற்படி பணக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது.

அத்துடன் புலோலி கிராமி வங்கியில் பென்சன்பெறுபவர்களுக்கு இவ்வரி மாத பென்சன் தொகை முழுவதும் பணமாகவும்வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை இலங்கை வங்கி பென்சன்காரர்களுக்கு 1,500 ரூபா மட்டுமே பணமாக வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (15)

## நடேஸ்வரா மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டை

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் க. பொ. த. உயர்தரவகுப்பில் கல்விகற்று எதிர்வரும் 23 ஆம் திகதிபரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களது அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உடுவிலிலுள்ள கல்லூரியின் உப அதிபரின் வீட்டில் தற்காலிகமாக இயங்கும் கொத்தணியின் பணிமனையில் வைத்து இவை வழங்கப்பட்டு வருகின்றன.

தேசிய அடையாள அட்டையை இழந்துள்ள மாணவர்கள் தமது பரீட்சைக்கான அடையாளத்தை நிரூபிக்க இரண்டு புகைப்படங்களுடன் கல்லூரி உப அதிபரைச் சந்திக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. 32

## வீதிகளில் குப்பை போட்டால் கடும் நடவடிக்கை

வடமராட்சிதெற்கு,மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் குப்பை கூழங்கள் போடப்படுவதால் தற்போதைய காலகட்டத்தில் சுகாதாரசேவைகளைத் திருப்திகரமாகச் செய்ய முடியாதிருப்பதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் இ. ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.

ஆகவே வீதிகளிலோ ஓரங்களிலோ குப்பை கழிவுகள், முட் செடிகள், முருங்கை, பப்பாசி, போன்றமரங்களையோ போடுவதைத் தவிர்த்து சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஒத்துழைக்கும் படியும் மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (33)

### மடு...

யான அகதிகள் இம்முகாமிற்கு தினமும் வந்த வண்ணம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார்ப் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்ந்து நடைபெறும் மோதல்களையடுத்தே இவர்கள் வெளியேறுகின்றனர். (ப- 11)

### செலவழிக்கப்...

இதற்கான நிதி இன்மையாலேயே இக்கொடுப்பனவுகளைச் செய்ய முடியாதிருந்ததாக தட்டிக் கழிக்கப்பட்டதாம்.

இதேவேளை கடந்த ஆண்டு இறுதியில் பெருமளவு பணம் செலவழிக்கப்படாமல்

### முஸ்லிம்...

னர்.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் சிலர் பயமுறுத்தப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தேர்தல் ஆணையாளருக்குப்புகார் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (33)

### மத்திய...

தெரியவருகிறது.

இதேவேளை இதேபோன்று கந்தளாய்க்கு அனுப்பப்பட்ட 5 லட்சம் ரூபா உடனடியாக

### ஜனாதிபதி |

றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தனது உரையில் எதிர்க்கட்சியினரின் பகிஷ்கரிப்பை சுட்டிக்காட்டியிருந்தார்.

### திருமலைத் -

ரகுபதி (நடவசீலன் கந்தளாய்) லக்ஷ்மன் (வே சந்திரலிங்கம் சீனன்குடா) ஆகியோர்வீரமரணமடைந்தனர்.

இத்தாக்குதலில் படையினரிடமிருந்து ஏ. கே. எல். எம் ஜி-1, ரம் மகஸின்-2, ரீ-81-2, மகஸின்-8, ரீ 56-2 மகஸின்-8, ஐ. எம் ரவைகள் 382, ஜே ஆர் கைக்குண்டு என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. 71)

### பிரான்ஸ் -

செய்யப்பட்டனர்.

பல லட்சம் ரூபாவை

## இன்று அஞ்சலி

நேற்று முன்தினம் மன்னார் பரப்புக் கடந்தானில் வீரமரணமடைந்த றொக்கி, (வரதலிங்கம், செல்வகுமார், ஆவரங்கால்) வீமன்காமத்தில் வீரமரணமடைந்த தமிழ்ச்சி ஆகியோரின் புகழுடல்கள் இன்று காலை 9 மணி முதல் 10 மணிவரை ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனஞ் செய்யப்படும். (71)

### பூவரசங்குளம்...

இவ்வாறு 55 இராணுவ வாகனங்களில் திரும்பிச் செல்லும் போது பொதுமக்களின்

## கூட்டுறவாளர் கூட்டம்

யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள், தெ. ப. பொ. கூ. சங்கங்கள். ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்

## வீரமரணம்

கடந்த வியாழனன்று வவுனியாவில் நடந்த வெடிவிபத்தில் மஞ்சணன் (சண்முகவேல் சத்தியசீலன், நுவரெலியா) வீரமரணமடைந்தார்.

நேற்றுக்காலை 6 மணியளவில் வீமன்காமத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் தமிழ்ச்சி (முருகையா, நிமலகாந்தன், தெல்லிப்பழை) வீரமரணமடைந்தார். (71)

## 22 ஆம் திகதி திங்கள் முக்கிய கூட்டம்

பட்டதாம்.

இதேவேளை கடந்த ஆண்டு இறுதியில் பெருமளவு பணம் செலவழிக்கப்படாமல் திருமலை மாகாணசபைக்கு இவ்வலுவலகத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் மாகாணசபை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (66)

தெரியவருகிறது.

இதேவேளை இதேபோன்று கந்தளாய்க்கு அனுப்பப்பட்ட 5 லட்சம் ரூபா உடனடியாகவே அங்கு அனுப்பி செலவழிக்கப்பட்டு மேலும் 5 லட்சம் ரூபா அப்பகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்படடுள்ளதாகவும் திருமலை செய்திகள் தெரிவிக்கின்றன. (66

## போர்க்காலத்தில்...

லெல்லாம் நடுகிறார்கள். இதன் காரணமாக மரவள்ளிக்குப் போதியபசளை இல்லாமல் போகிறது.

கே: சில மரவள்ளிக் கிழங்கில் நஞ்சு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. நஞ்சுள்ள கிழங்கை இனம்காண முடியுமா?

ப: இவ்விடயமாக விவசாயத்திணைக்களம் ஒரு விளக்கம் தந்தது அதையே சொல்லுகிறேன். மரவள்ளித் தோலின் உட்புறத்தில் பாசாணம் உண்டு. மாரிகாலக் கிழங்கிலும் பார்க்கக் கோடைகாலக் கிழங்கில் பாசாணம் கூட உள்ளது. மரவள்ளிக்கிழங்கின் வெளிப்புறம் காயப்பட்டால், அல்லது கிழங்கு இழுத்தபின் 'இரண்டு நாட்களுக்கு வைத்திருந்தால்' பாசாணம் தோன்றும். கிழங்கு நீலம் பாரிக்கும். இதை அகற்றலாம். சமையலின் போது கிழங்கைக் கழுவி, மூடாது அவிப்பதால் இலகுவில் அகற்றலாம்.

திரு இலங்கைநாதன் மேற்கு வானத்தைப் பார்க்கிறார். "மணி ஆறு ஆகியிருக்கும் போலிருக்கு. இறைக்கிற மெசின் பழுதுபட்டிட்டுது. திருத்த வேணும். நாளைக்கு இறைப்பு முறை" என்கிறார். நன்றி கூறி விடைபெறுகிறேன் நான்.

சந்தித்தவர்: வி.பி.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவெட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி' லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 20-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பிரான்ஸ் –

செய்யப்பட்டனர்.

பல லட்சம் ரூபாவை ஏஜன்சிக்கு கொடுத்து இவர்கள் பயணத்தைத் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களில் இவ்வாறு வெளிநாடு சென்றவர் திருப்பி அனுப்பப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (33)

## கல்வித்...

னை விஜயகிரி. துரைரட்ணம் மலரராணி, தர்மதேவன் ஜசோதரன்- ஏம்பிரகாம் டோறிஸ் தமிலா வசந்தானெற். எஸ். உமா, தர்மதேவன், வினோதரன் ஆகிய தனிப்பட்ட பரீட்சாத்திகளின் அனுமதி அட்டையே கல்வித்திணைக்களத்தில் உள்ளதாக தெரியவருகிறது.

யாழ் மாவட்ட பரீட்சை நிலையங்களுக்கு விண்ணப்பித்த வெளிமாவட்ட மாணவர்களுடைய ஐம்பதுக்கும் மேற்பட்ட க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சை அனுமதி அட்டைகள் மாணவர்கள் கல்வித்திணைக்கள தகவல் மையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர். (74)

இவ்வாறு 55 இராணுவ வாகனங்களில் திரும்பிச் செல்லும் போது பொதுமக்களின் வீடுகளை கொள்ளையடித்து நாசமாக்கியதுடன் ஒரு கடையையும் எரித்துள்ளனர். (71)

## திருமலை...

நடந்த இச் சுற்றிவளைப்பில் 3 ஆண்களை சுட்டுக்கொன்றதுடன், ஒருவரை கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.

இதனையடுத்து புதன்று மேலும் 10 ஆண்களை கைது செய்து முகாம் கொண்டு சென்றனர். இவர்களில் 5 பேர் வயோதிபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது 20 வீடுகளை எரித்ததுடன் 10 சைக்கிள்களை உடைத்து நாசமாக்கியுள்ளனர். (71)

## யாழ்...

மாணவர்களும் இம்மாவட்டப் போட்டிக்கு அழைக்கப்படவுள்ளனர்.

மாவட்டத்தில் முதலாமிடம் பெறும் நிகழ்ச்சிகள் மாகாணப் போட்டிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (32)

யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள், தெ. ப. பொ. கூ. சங்கங்கள். ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், யாழ் கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அனைவரையும் நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ப. நோ. கூ. சங்க காரியாலயத்திற்கு வருகை தருமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றார்கள்.

இக் கூட்டத்தில் மேலின ஏற்பாடுகள், உணவுப் பொருள் கொள்வனவுகள் சம்பந்தமாக ஆராயப்பட இருப்பதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு...

பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக செயலகத்தில் குடாநாட்டின் உதவி அரச அதிபர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமற்றது என்ற முடிவு எடுக்கப்பட்டது தெரிந்ததே. (47)

## 22 ஆம் திகதி திங்கள் முக்கிய கூட்டம்

உள்ளூராட்சி நிர்வாகத்தின் மிக முக்கியமான விடயம் சம்பந்தமாக முடிவெடுப்பதற்கு நகரசபைச் செயலாளர்களையும், பிரதேச சபைகளின் விசேட ஆணையாளர்களையும், அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களையும், உப அலுவலகங்களின் பொறுப்பு அதிகாரிகளையும், சகல சனசமூக நிலையங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும், சமாஜ அங்கத்தவர்களையும் சகல பாலர் பாடசாலை ஆசிரியர்களையும். உள்ளூராட்சி இலாகா ஊழியர்களையும் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் தவறாது ஒன்றுகூடும்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## ஒருவார உணவு

காரைநகர்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தசுமார் 4500 குடும்பங்களுக்கு ஒருவார இலவசஉலர் உணவுவழங்கப்பட்டதாகசெயலகவட்டாரங்கள் தெரிவித்தன. (74)